மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ், பி.ஏ., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24 ஆம் நாள் செவ்வாய்கிழமை
இ.ம.எண்.02/2019
அசல் வழக்கு எண்.50/2019

பி. மாதையன் ... மனுதாரர்/வாதி

/எதிராக/

கே.செல்வராஜ் ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு கடந்த 23.08.2021 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.சி.வேல்முருகன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.சிவராமன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், இருதரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

## உத்தரவு

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 26 விதி 9 மற்றும் பிரிவு 151ன் கீழ் நீதிமன்ற ஆணையாளரை நியமிக்க உத்தரவிட கோரி மனுதாரர்/வாதி மனுதாக்கல் செய்துள்ளார்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : –

(i) மனுசொத்து மனுதாரரின் தகப்பனார் பொன்னப்பனுக்கு பாத்தியப்பட்டது. பொன்னப்பனும், அவரது மகளும் வழக்கு சொத்தை மனுதாரருக்கு செட்டில்மெண்ட் செய்து வைத்துவிட்டனர். மனுதாரர் மனுசொத்தை அனுபவித்து வருகிறார். எதிர்மனுதாரருக்கு மனுசொத்திற்கு தெற்கே சொத்துகள் உள்ளது. எதிர்மனுதாரர் வழக்கு சொத்திலும் தனக்கு உரிமையுள்ளதாக கூறி வருகிறார். எனவே நீதிமன்ற ஆணையாளரை நியமனம் செய்து கிராம நிர்வாக அலுவலர் மற்றும் நில அளவையர் உதவியுடன் தாவா சொத்தை அளவுசெய்து அத்து காட்டி வரைபடத்துடன் அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட கோரி மனுதாரர்/வாதி மனுதாக்கல் செய்துள்ளார்.

2) எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:

மனுசொத்து மனுதாரரின் தகப்பனார் பொன்னப்பனுக்கு பாத்தியப்பட்டது என்பதும், மனுதாரருக்கு கொடுக்கப்பட்டு மனுதாரர் சுவாதீனத்தில் உள்ளதாக கூறுவதும் பொய்யாகும். வழக்கு சொத்திற்கு அருகே எதிர்மனுதாரர் இருந்தார் என்பது உண்மையாகும். எதிர்மனுதாரர் வாதியை இடையூறு செய்யவில்லை. எதிர்மனுதாரரின் சொத்தை விட மனுதாரரின் சொத்து 2 அடி உயரத்தில் உள்ளது. அதற்கான கல் கட்டிடமும் உள்ளது. மனுதாரர் இடையூறு செய்வதால் சொத்துகளை அளக்க எதிர்மனுதாரர் முயற்சி செய்தார். ஆனால் மனுதாரரின் உறவினரும், கிராம நிர்வாக அலுவலருமான சத்தியபிரியா என்பவர் ஒருதலைப் பட்ச மாக இருந்து புல வரைபடத்தில் திருத்தங்கள் மேற்கொண்டுள்ளார். அந்த போர்ஜரியாக திருத்தப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் மனுதாரர் சொத்துகளை அளக்க முயன்றதால் எதிர்மனுதாரர் ஆட்சேபணை செய்தார். ஆகவே மனுதாரர் எதிர்மனுதாரருக்கு இடையூறு செய்து வருகிறார். இந்நிலையில் மனுதாரர் எதிர்மனுதாரரின் சொத்துகளை தன்னுடைய சொத்துகளுடன் சேர்த்து கொள்ள முயற்சி செய்துவருகிறார். மனுதாரர் பொய்யான உரிமை கோரி எதிர்மனுதாரரின் சொத்தை அபகரிக்க இரண்டு வழக்குகளை தாக்கல் செய்துள்ளார். எனவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்/பிரதிவாதி கூறியுள்ளார்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. இம்மனு விசாரணையின் போது மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்களோ, ஆவணச் சாட்சியங்களோ எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

4) பிரச்சினை :-

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர்/வாதி தரப்பில் மனுசொத்து மனுதாரரின் தகப்பனார் பொன்னப்பனுக்கு பாத்தியப்பட்டது எனவும், பொன்னப்பனும், அவரது மகளும் வழக்கு சொத்தை மனுதாரருக்கு செட்டில்மெண்ட் செய்து வைத்துவிட்டனர் எனவும், மனுதாரர் மனுசொத்தை அனுபவித்து வருகிறார் எனவும், எதிர்மனுதாரருக்கு மனுசொத்திற்கு

தெற்கே சொத்துகள் உள்ளது எனவும், எதிர்மனுதாரர் வழக்கு சொத்திலும் தனக்கு உரிமையுள்ளதாக கூறி வருகிறார் எனவும், எனவே நீதிமன்ற ஆணையாளரை நியமனம் செய்து கிராம நிர்வாக அலுவலர் மற்றும் நில அளவையர் உதவியுடன் தாவா சொத்தை அளவுசெய்து அத்து காட்டி வரைபடத்துடன் அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட கோரி மனுதாரர்/வாதி மனுதாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii) எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் மனுசொத்து மனுதாரரின் தகப்பனார் பொன்னப்பனுக்கு பாத்தியப்பட்டது என்பதும், மனுதாரருக்கு கொடுக்கப்பட்டு மனுதாரர் சுவாதீனத்தில் உள்ளதாக கூறுவதும் பொய் எனவும், வழக்கு சொத்திற்கு அருகே எதிர்மனுதாரர் இருந்தார் என்பது உண்மை எனவும், எதிர்மனுதாரர் வாதியை இடையூறு செய்யவில்லை எனவும், எதிர்மனுதாரரின் சொத்தை விட மனுதாரரின் சொத்து 2 அடி உயரத்தில் உள்ளது எனவும், அதற்கான கல் கட்டிடமும் உள்ளது. மனுதாரர் இடையூறு செய்வதால் சொத்துகளை அளக்க எதிர்மனுதாரர் முயற்சி செய்தார் எனவும், ஆனால் மனுதாரரின் உறவினரும், கிராம நிர்வாக அலுவலருமான சத்தியபிரியா என்பவர் ஒருதலைப் பட்ச மாக இருந்து புல வரைபடத்தில் திருத்தங்கள் மேற்கொண்டுள்ளார் எனவும், அந்த போர்ஜரியாக திருத்தப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் மனுதாரர் சொத்துகளை அளக்க முயன்றதால் எதிர்மனுதாரர் ஆட்சேபணை செய்தார் எனவும், ஆகவே மனுதாரர் எதிர்மனுதாரருக்கு இடையூறு செய்து வருகிறார் எனவும், இந்நிலையில் மனுதாரர் எதிர்மனுதாரரின் சொத்துகளை தன்னுடைய சொத்துகளுடன் சேர்த்து கொள்ள முயற்சி செய்துவருகிறார் எனவும், மனுதாரர் பொய்யான உரிமை கோரி எதிர்மனுதாரரின் சொத்தை அபகரிக்க இரண்டு வழக்குகளை தாக்கல் செய்துள்ளார் எனவும், எனவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்/பிரதிவாதி கட்சி செய்துள்ளது தெரிய வருகிறது.

(iii) இருதரப்பிலும் மனுதாரரின் சொத்திற்கு தென்புறம் எதிர்மனுதாரரின் சொத்து உள்ளது என்பதை ஒப்புக் கொண்டுள்ளனர். எதிர்மனுதாரர் தரப்பில் ஏற்கனவே சொத்துகளை அளக்க முயற்சி செய்ததாகவும், புலவரைபடத்தில் திருத்தம் மேற்கொண்டு அதன் அடிப்படையில் அளக்கும்போது தான் தடுத்ததாகவும் ஒப்புக் கொண்டுள்ளார். இந்நிலையில் மனு சொத்திற்கு தென்புறம் எதிர்மனுதாரரின் சொத்து

உள்ளதால் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரருக்கு இடையே சொத்துகளின் எல்லை குறித்து பிரச்சனை உள்ளதை அறியமுடிகிறது. எனவே வழக்கு சொத்தின் எல்லையை குறித்து நீதிமன்ற ஆணையாளர் தாக்கல் செய்யும் அறிக்கையானது இவ்வழக்கினை தீர்மானிக்க உதவும் என்பதால் இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக திரு.வி.ரணதேவ் வழக்கறிஞர் நீதிமன்ற ஆணையாளராக நியமிக்கப்படுகிறார். கற்றறிந்த நீதிமன்ற ஆணையாளர் வழக்கு சொத்தை கிராம நிர்வாக அலுவலர் மற்றும் நில அளவையருடன் இருதரப்பு ஆவணங்களின் மூலம் அளந்தும், அத்து நிர்ணயம் செய்தும், வழக்கு சொத்தின் இயற்பியல் தோற்றம் குறித்து அறிக்கையும், வரைபடமும் தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையாளரின் கட்டணம் ரூ.5000/– என நிர்ணயம் செய்யப்படுகிறது. நீதிமன்ற ஆணையாளரின் கட்டணத்தை மனுதாரர் நேரடியாக செலுத்த வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. கற்றறிந்த நீதிமன்ற ஆணையாளர் இருதரப்பினருக்கும் உரிய அறிவிப்பு வழங்கியதற்கு பின்னிட்டு வழக்கு சொத்தினை பார்வையிட வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையாளரின் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய அழைக்க 06.10.2021.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/–திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை

ஒப்பம்/–திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.